**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. No.76/2015**
**PW16**

| | | |
|---|---|---|
| Name | : | குமரேசன் |
| Father's/Husband's Name | : | பரசுராமன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.07.2025.

Accused present.

**முதல் விசாரணை**

நான் காவல் பணியில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 2016 ல் பணிநிறைவு பெற்றேன். கடந்த 2013 ல் மேல்செங்கம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 30.08.2013 அன்று மேல்செங்கம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த 546 திரு.சுப்பிரமணி என்பவர் 01.09.2013 அன்று காலை 9 மணிக்கு தருமபுரி அரசு மருத்துவமனையில் இருந்த சக்திவேல் (38) த.பெ. செல்வராஜ் , நீப்பத்துரை கிராமம் என்பரிடம் இருந்து எடுத்துவந்த வாக்குமூலத்திபேரில் 01.09.2013 ல் இரவு 23 மணிக்கு மேல்செங்கம் காவல் நிலைய குற்ற எண். 142/2013 ல் 294(b) , 324,506(2) இதச - ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை**அ.சா.ஆ.10.** பதிவு செய்யப்பட்ட முதல் அறிக்கை மற்றும் புகாரை இணைத்து நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பின்னர் வழக்கை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன் . ஆய்வளார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் சம்பவத்திற்கு முன்பு 3 ஆண்டுகளாக மேல்செங்கம் காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். நான் 01.09.2013 அன்று காலை 9 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்தபோதுதான் தருமபுரி அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் வந்தது. அந்த தகவலை பொது நாட்குறிப்பில் பதிவு செய்தேன் . அதன்பிறகு தான் தலைமை காவலர் சுப்பிரமணி என்பவரை வாக்குமூலம் பதிவு செய்ய அனுப்பினேன் . தலைமைகாவலர் சுப்பிரமணி புகார் வாக்குமூலத்தை பதிவு செய்துகொண்டு காவல் நிலையத்தில் இரவு 11 மணிக்கு கொடுத்தார். அன்றைய தினம் சுப்பிரமணிக்கு அந்த வேலைதான் கொடுக்கப்பட்டது. எனக்கு அரூர் மருத்துவமனையில் இருந்து எந்த தகவலும் வரவில்லை. எனக்கு அரூர் மருத்துவமனையில் இருந்து இறந்துபோன நபர் அனுமதிக்கப்பட்ட தகவல் அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரியல்ல . இறந்துபோன சக்திவேல் தருமபுரி மருத்துவமனையில் 31.08.2013 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளார். நேரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை . அவரது வாக்குமூலத்தில் அவர் அந்த மருத்துவமனையில் சேர்ந்த நேரம் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த புகார் வாக்குமூலத்தில் அந்த வாக்குமூலம் 01.09.2013 அன்று காலை 9 மணிக்கு பதிவுசெய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் 01.09.2013 அன்று தனக்கு அறுவை சிகிச்சை நடக்கப்போவதாக குறிப்பிட்டுள்ளார். அந்த வாக்குமூலத்தில் அவருடைய கைரேகை வைத்துள்ளார். அந்த வாக்குமூலத்தில் அவருடைய கைரேகை இல்லை என்று சொன்னால் சரியல்ல . 02.09.2013 அன்று சக்திவேல் காலை 4.20 க்கு இறந்துவிட்டதாக மேல்செங்கம் காவல் நிலையத்திற்கு காலை 5.20 மணியளவில் தகவல் கிடைத்தது . நான் அப்போது இரவு ரோந்து பணிக்கு சென்றதால் அந்த தகவலை நாட்குறிப்பில் நான் பதிவு செய்யவில்லை . சக்திவேல் இறந்த தகவல் கிடைத்த பின்புதான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல . நான் பணியில் இருந்தபோது தகவல் பெற்ற விவரத்தை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்ததாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன் . நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை சக்திவேல் இறந்தபிறகு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல . அரூர் அரசு மருத்துவமனையில் இருந்து மரு. ரமேஷ் என்பவரால் கிடைக்கப்பெற்ற தகவல் என்னால் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . புகார் வாக்குமூலத்தில் உள்ளது சுப்பிரமணியின் கையெழுத்துதான். 13.08.2013 அன்று நடந்த சம்பவத்திற்கு

30.08.2013 ல் தாக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் . புகார் வாக்குமூலம் மருத்துவமனையில் பதிவு செய்யப்படவில்லை என்றும் ,சக்திவேல் இறந்தபின்பு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல . இறந்த நபரால் வாக்குமூலம் கொடுக்கப்படவில்லை என்றும் அவர் வாக்குமூலம் கொடுக்கும் நிலையிலும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.